V10T

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவத் தேர்வு - ஜூலை 2022

-----

வகுப்பு 10

நேரம்: 1.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 50

**I. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக:** 8×1=8

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை

அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2) ஒவ்வோர் ஆண்டும் உலகக்காற்று நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது?

அ) ஜூன் 15 ஆ) ஜூன் 5 இ) ஜூலை 15 ஈ) ஆகஸ்ட் 15

3) பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

4) 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5) "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

6) சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

அ) பெருஞ்சித்திரனார் ஆ) தமிழழகனார்
இ) பாவாணர் ஈ) பாரதியார்

7) பெரிய மீசை சிரித்தார் - இத்தொடரில் பெரிய மீசை என்பது எவ்வகைத் தொடர்?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

8) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

**II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** 2×2=4

9) வசன கவிதை - குறிப்பு வரைக.

10) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

11) பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் நான்கினை எழுதுக.

**III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:** 2×2=4

12) தானியங்களுக்கு வழங்கும் சொற்களைக் குறிப்பிடுக.

13) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

14) காற்று வீசுகின்ற திசையைக் கொண்டு தமிழர்கள் காற்றுக்கு சூட்டியுள்ள வேறுபெயர்கள் யாவை?

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக: 3×3=9**

15) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

16) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

17) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

18) தமிழர்கள் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

**V. ஏதேனும் ஒரு வினாவிற்கு விடை எழுதுக: 1×6=6**

19) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

20) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக: 2×2=4**

21) தொடர்மொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

22) தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

23) பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3×1=3**

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

மலை - மாலை

25) **பொருள் கூறுக:**

அ) அடவி ஆ) ஆர்கலி

26) **கலைச்சொல் தருக:**

அ) Tempest ஆ) Consonant

**VIII. தமிழாக்கம் செய்க: 1×3=3**

27) அ) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

- Nelson Mandela

ஆ) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going.

- Rita Mae Brown

**IX. ஏதேனும் ஒன்றனுக்கு விடை எழுதுக: 1×6=6**

28) சான்றோர் வளர்த்த தமிழ்

29) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

**X. அடிபிறழாமல் எழுதுக: 1×3=3**

30) 'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593